நோய்வாய்ப்பட்டு, 'இண்டஸ்ட்ரியல் டிஸீஸ்' ஏற்பட்டதனால் எத்தனை பேர் இறந்தார்கள்? அப்படி இறந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த பேக்டரி மூடும்போது பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள் 17 பேர். இறந்தவர்கள் எண்ணிக்கை பற்றிய கணக்கு விவரம் இல்லை.

திரு கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையில் 30 பேர்கள் வரையிலும் பணியாற்றினார்கள் என்றும், பணியாற்றிய காலத்தில் நோய்வாய்ப்பட்டு இறந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. அப்படி இறந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று கோரி அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அப்படி ஏதேனும் மனு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி அனுப்பினால் உயிர்நீத்தவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு தரப்படுமா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவர் அவர்களே, அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

Survey of Small Scale Industries

* 657 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Institute of Fundamental Economic Research, New Delhi has undertaken any market survey of the Small Scale Industries and the Financial Investment in this State during July 1971; and

(b) if so, the details there of?

மாண்புமிகு திரு செ. மாதவன்: (அ) அரசிடம் இதுபற்றி தகவல் ஏதுமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

பாலங்கள்

*658 வினா—திரு என். இட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் காவிரியின் குறுக்கே புதிதாக ஏதேனும் பாலங்கள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஆம்.

1972 மார்ச் 23

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்களில் காவிரியின் குறுக்கே பாலங்கள் திருச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, முசிரி குளித்தலை சாலையிலும், திருச்சி நகர ஊர் சாலைக்குள் இருக்கிற தேசீய நெடுஞ்சாலை எண் 45-ல் திருச்சியிலிருந்து 194, 195 மைல்களில் இரண்டு பாலங்கள் கட்டுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன.

*659 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் உள்ள மணல்மேடு நகரப் பஞ்சாயத்தையும், காட்டுமன்னார்கோயில் தொகுதியிலுள்ள முட்டம் கிராமத்தையும் இணைக்க கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் தோகுதியில் உள்ள மணல்மேடு நகரப் பஞ்சாயத்தையும், காட்டுமன்னார்குடி தொகுதியிலுள்ள முட்டம் கிராமத்தையும் இணைக்கும் வகையில் கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் கட்ட கீழத் தஞ்சை நெடுஞ்சாலைத் துறை, மூலமாக 75 லட்சம் ரூபாய் அளவில் மதிப்பீடுகளைத் தயார் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அது மிகவும முக்கியமானது. மணல்மேட்டிலிருந்து காட்டுமன்னார்குடி பகுதிக்கு செல்லவேண்டுமென்றால் 40 மைல், 50 மைல் சுற்றிப்போகவேண்டிய காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டித் தருவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மாணபுமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய கேள்வியிலேயே 75 லட்சம் ரூபாய் செலவாகலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போதுள்ள நிதிநிலையிலிருந்து இப்போதைக்கு அது ஏற்றுக்கொள்ள முடியாது. வருங்காலங்களில் அதை எதிர்பார்க்கலாம்.

சென்னை விமான நிலையம்

*660 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை விமான நிலையத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயர் சூட்டக்கோரி மத்திய அரசுக்குக் கடிதம எழுதப்பட்டதா ?